**மானாவாரி மகசூல்...**



ஏக்கருக்கு ரூ.7,500/-...பனியில் கொழிக்கும் கொண்டைக்கடலை..!

பருப்பு வகை உணவுப் பொருட்களில் மிகமுக்கிய இடத்தில் இருப்பது... கடலைப் பருப்பு. அதற்கான மூலப்பயிர்தான் கொண்டைக்கடலை. பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனி உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் கரிசல் காடுகளில் மானாவாரியாக கொண்டைக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. விதைகள் என்னவோ... பாரம்பரியம் மிக்க நாட்டுரகம் தான் என்றாலும், பெரும்பாலான விவசாயிகள் ரசாயன முறையில்தான் சாகுபடி செய்து வருகிறார்கள். சிலர் மட்டுமே இயற்கை முறையில் சாகுபடி செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி அருகேயுள்ள காட்டம்பட்டிபுதூர் சிவகுமார்.

காபித்தூளை கவிழ்த்துக் கொட்டியது போல கண்ணுக்கு, எட்டிய தூரம் வரை விரிந்து கிடக்கிற கரிசல் பூமியில், அறுவடை செய்த கடலையை பெற்றோர் உதவியுடன் சிவகுமார் மூட்டை பிடித்துக் கொண்டிருந்த நேரத்தில் அங்கே ஆஜரானோம். நம்மை அறிமுகப்படுத்திக் கொண்டதும் மிகுந்த மகிழ்ச்சியோடு பேச ஆரம்பித்தார்.

அவர் பூர்வீகம் இந்த காட்டம்பட்டிபுதூர் தான். அவர் தந்தை மின்சார வாரியத்தில் வேலையில் இருந்ததால் இவர் பிறந்தது வளர்ந்தது எல்லாம் வெளியூரில் தான். அவர் அரசாங்க பேருந்து ஓட்டுநராக இருக்கிறார். பசுமைவிகடன் தொடர்கள் இவருக்குள் விவசாயம் செய்கிற எண்ணம் வளர குடும்பத்துடன் கிராமத்துக்கே குடிவந்து, விவசாயம் பார்க்க ஆராம்பித்திருக்கிறார். இவர் பூர்வீக நிலம் 5 ஏக்கரில் இரண்டு போகம் கொண்டைக் கடலையும், கொத்துமல்லியும் போட்டு மகசூல் எடுத்திருக்கிறார்.

கொண்டைக் கடலையின் வயது 110 நாட்கள். கார்த்திகையில் விதைத்து மாசியில் அறுவடை செய்யலாம். இது, பனியில் விளையும் பயிர். அதனால் தான் கிராமப்புறங்களில் இதை ‘பனிக.கடலை’ என்றும் அழைக்கிறார்கள். அதிக மழை, கரிசல் பூமிக்கு ஆகாது. அதனால்தான் கார்த்திகைப் பட்டத்தில் விதைக்கிறார்கள். கரிசல் மண் பூமியில் நீண்ட நாள் சரை ஈரப்பதம் இருப்பதால், வேர்களுக்கு மிதமான ஈரம் இருந்து கொண்டே இருக்கும். அதை வைத்தே பயிர் வளர்ந்துவிடும். பங்குனி, சித்திரையில் ஏக்கருக்கு, 10 டிராக்டர் தொழுவுரத்தை இறைத்து, கோடை உழவு செய்ய வேண்டும். கரிசல் மண் கட்டியாக மாறும் தன்மை கொண்டது. அதனால் இரண்டு உழவு அவசியம். அதைத் தொடர்ந்து புரட்டாசி, ஐப்பசி மாதங்களிலும் இரண்டு முறை உழவு செய்ய வேண்டும். வடகிழக்கு பருவமழையை மண்ணில் பிடித்து வைக்க இந்த உழவு அவசியம்.

கார்த்திகை மாதம் மீண்டும் ஒரு உழவு போட்ட விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 40 கிலோ விதை தேவைப்படும். உழவு சாலில் ஒரு அடிக்கு ஒரு விதை (தோராயமாக) என்ற கணக்கில் விதைக்க வேண்டும். விதைத்த 7 நாட்களுக்கு செடி முளைத்து விடும். 28-ம் நாள் ஒரு களை எடுக்க வேண்டும். 30-ம் நாள் 100 லிட்டர் தண்ணீரில் 10 விட்டர் ஜீவாமிர்தத்தை கலந்து காலை நேரத்தில் செடிகள் மற்றும் மண் நனையும்படி தெளிக்க வேண்டும். மண்ணில் உள்ள நுண்ணூட்டங்களை வேர்களுக்கு எடுத்துக் கொடுத்து, செடி வளர இந்த தெளிப்பு உதவும். விதைத்த 60 முதல் 70 நாட்களுக்குள் பூ எடுக்கும். அந்த சமயத்தில் ஒரு தடவை ஜீவாமிர்தத்தை தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உதிராமல் பிஞ்சாக மாறும். 80-ம் நாளில் பிஞ்சுகள் வைக்கும். அப்போது, 100 லிட்டர் தண்ணீரில் 4 லிட்டர் புளித்த மோர், ஒரு லிட்டர் இளநீர் அகியவற்றைக் கலந்து, மாலை வேளையில் தெளிக்க வேண்டும். இது, பயிரில் வரும் பூஞ்சானத்தைக் கட்டுப்படுத்துவதுடன், வளர்ச்சி ஊக்கியாகவும் வேலை செய்யும்.

90-ம் நாளுக்கு மேல் பிஞ்சுகள் காயாகும். அப்போது பச்சைப் புழு தாக்குதல் அதிக அளவில் இருக்கும். இந்தப் புழுக்கள், பிஞ்சுகளைத் துளைத்து உள்ளே சென்று சேதப்படுத்தும். இதைத் தடுக்க, நீம்அஸ்த்திரத்தை தெளிக்க வேண்டும். செடிக்கு 50 காய்கள் வரை கொத்துக் கொத்தாக தொங்கும். தை மாதக் கடைசியில் செடிகள் காய்ந்து காய்கள் பொன்னிறமாக காட்சி அளிக்கும். அதைத் தொடர்ந்து உரிய நேரத்தில் அறுவடை செய்யலாம். வெயில் நேரத்தில் அறுவடை செய்தால் காய்கள் உதிர்ந்துவிடும். எனவே, அதிகாலை நேரத்தில் அறுவடை செய்து, அம்பாரம்

அமைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அறுவடை இயந்திரத்தின் மூலம் காய்களை பிரித்து தூற்றி, மூட்டைப் பிடித்துக் கொள்ளலாம்.

ஏக்கருக்கு சராசரியாக 600 கிலோ மகசூல் கிடைக்கும். கிலோ 28 ரூபாய்க்கு விற்பனையாகிறது. செலவு போக, ஏக்கருக்கு 7,500 ரூபாய் லாபமாக கிடைக்கும். வியாபாரிகள் வயலுக்கே வந்து எடைபோட்டு கைமேல் காசு கொடுத்து வாங்கிச் சென்று விடுவார்கள். கொண்டைக் கடலைக்கான தேவை அதிகம் உள்ளது. மும்பையைச் சேர்ந்த சில நிறுவனங்கள் 'கடலை மாவு' கலந்த சோப்பு தயாரிக்கின்றன. அதற்காகக் கொண்டைக் கடலையை கொள்முதல் செய்கின்றன. "ஜீரோ பட்ஜெட் முறையில் சாகுபடி செய்த கொண்டைக்கடலையை சீக்கிரமா புழுத்துப் போவதில்லை. அதனால் பல நாட்களுக்கு இருப்பு வைத்துக் கொள்ள முடியும். ருசியாகவும் இருக்கும். வரும் காலங்களில் இதை மதிப்புக் கூட்டிய பொருளாக மாற்றி நேரடியாக விற்பனை செய்யும் எண்ணம் கொண்டுள்ள அவர் அறுவடையான செடிகளில் நல்ல சத்துள்ளாதால் ஆடு, மாடுகள் விரும்பி உண்பதால் இது தீவனச் செலவையும் குறைக்கிறது என்கிறார்.

**தொடர்புக்கு:**

சிவகுமார்,

அலைபேசி : 99422-87878, 97503-76539 (வீடு)